பக்கங்கள் 18+6

மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 வைகாசி 09 புதன்கிழமை 22.05.2024 அதிர்வு 296

## மயங்கி வீழ்ந்து ஒருவர் மரணம்

### யாழ். ஊரெழுவில் துயரம்

யாழ்ப்பாணம், ஊரெழு கிழக்கில் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த ஒருவர், திடீரென மயங்கி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

04

# ஈரான் ஜனாதிபதியின் மறைவுக்கு தூதரகம் சென்று ரணில் இரங்கல்



கொழும்பிலுள்ள ஈரான் தூதரகத்துக்கு இன்று காலை சென்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசியின் திடீர் மரணத்துக்குத் தனது இரங்கலைத் தெரிவித்தார்.

தூதரகத்துக்குச் சென்ற ஜனாதிபதியை, இலங்கைக்கான ஈரான் தூதுவர் கலாநிதி அலி ரீஸா டெல்கோஷ் உள்ளிட்ட பணிக்குழாம் வரவேற்றது.

ஈரான் ஜனாதிபதியின் மறைவு குறித்து ஈரான் தூதுவர் உள்ளிட்டோருடன் கலந்துரையாடிய ஜனாதிபதி, அங்கு வைக்கப்பட்டிருந்த

# முதலில் ஜனாதிபதித் தேர்தல்

## அமைச்சரவைக் கூட்டத்தில் ரணில் திட்டவட்டம்



ஜனாதிபதித் தேர்தலே முதலில் நடைபெறும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இன்று காலை அமைச்சரவை கூடியபோது ஜனாதிபதித் தேர்தலுக்குத் தயாராகுமாறு அமைச்சர்களுக்கு அவர் அறிவித்துள்ளார்.

இந்த வருடத்தில் உரிய காலத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்த வருடம் நாடாளுமன்றத் தேர்தலுக்கு நிதி ஒதுக்கப்படவில்லை என்று தெரிவித்துள்ள ஜனாதிபதி, ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு மாத்திரமே நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# இளைஞர் மீது பொலிஸார் வாள்வெட்டு!

## யாழ்ப்பாணத்தில் பயங்கரம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணத்தில் இளைஞர் ஒருவர் மீது சிவில் உடையில் வந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரால் வாள்வெட்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் யாழ். தொல்புரம் மத்தியில் நேற்று இடம்பெற்றுள்ளது.

வாள்வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டவர் காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தின் விசேட பிரிவைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

வாள்வெட்டுச் சம்பவத்தில் படுகாயமடைந்த இளைஞர், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் 22 ஆம் இலக்க விடுதியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் வட்டுக்கோட்டைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.






# கல்விசாரா ஊழியர்களின் சம்பள உயர்வைக் கோரி யாழ். பல்கலைக்கழகத்தில் கவனவீர்ப்புப் போராட்டம்

**(பிரபாகரன் டிலக்சன்)**

கல்விசாரா ஊழியர்களின் சம்பள அதிகரிப்பைக் கோரி யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஜனநாயக ஊழியர் சங்கத்தினரால் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னடுக்கப்பட்டது.

நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் சம்பள உயர்வு கோரி கல்விசாரா ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுவரும் நிலையில் யாழ். பல்கலைக்கழக ஜனநாயக ஊழியர் சங்கத்தினரால் இன்று முற்பகல் 11 மணியளவில் யாழ். பல்கலைக்கழக முன்றலில் கவனவீர்ப்புப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது கல்விசாரா ஊழியர்களின் சம்பளத்தை அதிகரி, பல்கலைக்கழக ஊழியர்கள் மாற்றான் வீட்டுப் பிள்ளைகளா?, எம்.சி.ஏ. கொடுப்பனவை அதிகரி போன்ற கோஷங்களும் எழுப்பப்பட்டன.

இம்மாதம் 2ஆம் திகதி முதல் முன்னெடுக்கப்பட்டு வரும் கல்விசாரா ஊழியர்களின் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தால் மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகள் பாதிப்படைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.








# மட்டக்களப்பில் ஒரே பிரசவத்தில் 4 குழந்தைகளைப் பெற்ற தாய்!

**(கனகராசா சரவணன்)**

மட்டக்களப்பில் இயற்கையாகக் கருத்தரித்து ஒரே சுகப் பிரசவத்தில் 4 பிள்ளைகளைப் புதுக்குடியிருப்பைச் சேர்ந்த தாய் ஒருவர் பெற்றெடுத்துள்ளார்.

நான்கு குழந்தைகளும் தாயும் நலமாக இருக்கின்றனர் என்று மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் திருமதி கலாறஞ்சினி கணேசலிங்கம் தெரிவித்தார்.

மட்டு. போதனா வைத்தியசாலையில் இன்று நடைபெற்ற ஊடக மாநாட்டிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“மட்டு. புதுக்குடியிருப்பைச் சோந்த 25 வயதுடைய கரிகரின் கிருஷ்ணவேனி வெளிநாட்டில் இருக்கும்போதே கருத்தரித்துள்ளார். 8 வாரங்களில் வெளிநாட்டில் இருந்து நாடு திரும்பிய இவர், மட்டு. போதனா வைத்தியசாலையில் மகப்பேற்றுப் பிரிவில் கிளினிக்காக வந்த வேளை கதிர் வீச்சு மூலம் சோதனை செய்தபோது 4 குழந்தைகள் கருத்தரித்திருப்பதைக் கண்டுபிடித்தோம்

ஏற்கனவே சிசேரியன் மூலம் குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்துள்ள இவர், இயற்கையாகவே கருத்தரித்திருந்தார். அதனைத் தொடர்ந்து அவரை மிக நெருக்கமாகக் கண்காணித்துப் பராமரித்து வந்தோம்.

இந்தநிலையில், ஒரு ஆண், 3 பெண்கள் உட்பட 4 குழந்தைகளைச் சுகப் பிரசவம் மூலம் அவர் பெற்றெடுத்துள்ளார்.” – என்றார்.







# வலிகாமம் வடக்கில் விடுவிக்கப்பட்ட நிலங்களுக்குச் செல்லத் தடை விதிப்பு

## வெடிபொருள்கள் இருக்கின்றன என்று காரணம் கூறுகின்றது இராணுவம்

(ந.லோகதயாளன்)

வலிகாமம் வடக்கில் அண்மையில் விடுவித்த நிலங்களுக்குள் வெடிபொருள்கள் இருக்கின்றன என்று தெரிவித்து அந்தப் பகுதிகளுக்குச் செல்ல இராணுவத்தினரால் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் கடந்த மார்ச் 22ஆம் திகதி வசாவிளான் மற்றும் பலாலி ஆகிய கிராமங்களான ஜே/244,245,252, 253, 254, ஆகிய கிராம சேவகர் பிரிவுகளில் இருந்து 234 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்படுகின்றன என்று அறிவிக்கப்பட்டது. நில உரிமையாளர்களும் அழைக்கப்பட்டு நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இருந்தபோதும் அந்த நிலங்களுக்கான பாதை விடுவிக்கப்படவில்லை. இராணுவ முட்கம்பி வேலிகளும் அகற்றப்படவில்லை.

இவ்வாறு விடுவிக்கப்பட்ட நிலங்களை உரிமையாளர்கள் இராணுவச் சோதனைச் சாவடி ஊடாக 5 கிலோமீற்றர் தூரம் கால்நடையாகப் பயணித்தே பார்வையிட அனுமதிக்கப்பட்டனர். இந்த விடயத்தை நிலங்களின் உரிமையாளர்கள் வடக்கு மாகாண ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டு சென்றனர். இதனால் விடுவிக்கப்பட்ட நிலங்களுக்குப் பாதை திறக்கப்பட்ட போதும் முட்கம்பி வேலிகள் அகற்றப்படாமலேயே காணப்பட்டன.

முட்கம்பிகள் அகற்றப்படாதமை ஏதேனும் காரணத்தைக் கூறி விடுவிப்புச் செய்ததாகக் கூறப்படும் நிலங்களைப் படையினர் மீள ஆக்கிரமிக்கக்கூடும் என்று அஞ்சுவதாக அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த அமெரிக்கத் தூதுவரிடம் நிலங்களின் உரிமையாளர்கள் அச்சம் தெரிவித்திருந்தனர்.

விடுவிக்கப்பட்ட 234 ஏக்கர் நிலங்களில் 55 ஆயிரம் சதுர அடி நிலங்களில் வெடிபொருள்கள் காணப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டு அந்தப் பகுதிகளுக்குள் நில உரிமையாளர்கள் பயணிக்கத் தடை செய்யப்பட்டுள்ளது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**ஈரான் ஜனாதிபதியின்...**

குறிப்பேட்டில் இரங்கல் குறிப்பைப் பதிவிட்ட பின்னர், ஜனாதிபதி இப்ராஹிம் ரைசியின் திடீர் மரணத்துக்கு ஈரான் அரசுக்கும் அந்நாட்டு மக்களுக்கும் தனதும், இலங்கை அரசினதும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிததார்.







**மயங்கி வீழ்ந்து...**

ஊரெழுப் பிள்ளையார் ஆலயத்துக்கு அருகே நேற்று இந்தத் துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சிங்கரத்தினம் சசிக்குமார் (வயது – 48) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மரண விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டுள்ளார்.




# வங்காலைப் பகுதிகளை உள்வாங்கியது கடல் நீர்!

## அச்சத்தில் கிராம மக்கள்

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார், நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள வங்காலை வடக்கு மற்றும் மேற்குப் பகுதிகள் இன்று மதியம் திடீரெனக் கடல் நீரால் உள்வாங்கப்பட்டுள்ளன.

இன்று அதிகாலை முதல் மன்னார் மாவட்டத்தில் பலத்த காற்று வீசி வருகின்ற நிலையில் மீனவர்கள் கடற்றொழிலுக்குச் செல்லவில்லை.

இந்தநிலையில், வங்காலை வடக்கு மற்றும் மேற்குப் பகுதிகளை இன்று மதியம் திடீரெனக் கடல் நீர் உள்வாங்கியதோடு, கடற்கரையில் கட்டப்பட்டிருந்த படகுகள் மற்றும் வலைகள் நீரில் மிதந்துள்ளன. எனினும், படகுகளுக்கு எவ்வித சேதமும் ஏற்படவில்லை என்று மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

திடீரெனக் கடல் நீர் உள்வாங்கப்பட்டமையால் வங்காலை மீனவர்கள் மற்றும் கிராம மக்கள் அச்சத்தில் உள்ளனர்.

வங்காலை பங்குத்தந்தை மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் குறித்த பகுதிகளுக்குச் சென்று நிலைமையைப் பார்வையிட்டதோடு, உரிய அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளனர்.






# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## கெடுகுடி சொற் கேளாது...!

இலங்கைக்கு 5 நாள்கள் விஜயமாக வருகை தந்திருந்த சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகம் அக்னேஸ் கால்மார்ட் அம்மையார் தமது பயண முடிவில் நாட்டை விட்டுப் புறப்படும் முன்னர் தெரிவித்த விட்டுப் போன கருத்துக்கள் நோக்கற்பாலவை.

பாகுபாடு மற்றும் அடிப்படை சுதந்திரங்களின் அடக்குமுறைகளுக்கு முற்றுப் புள்ளி வைப்பதற்கும் -

நீண்டகாலம் நீடிக்கும் தண்டனையிலிருந்து விலக்களிக்கப்படும் பிரச்சினையை எதிர்கொள்வதற்கும் -

கடந்த காலத்தில் இடம்பெற்ற மற்றும் நிகழ்காலத்தில் இடம்பெறுகின்ற அத்துமீறல்கள் மற்றும் குறைகளை எதிர்கொண்டு நிவர்த்தி செய்வதற்கும் -

பாகுபாடு மற்றும் அடிப்படை சுதந்திரங்களின் அடக்குமுறைகளுக்கு முற்றுப் புள்ளி வைப்பதற்கும் -

எடுக்கப்படும் அனைத்து உண்மையான முயற்சிகள் மற்றும் அர்ப்பணிப்புகளை ஆதரித்து உதவ மன்னிப்புச் சபை முழு அளவில் தயாராக உள்ளது என்றார் அவர்.

நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டம் மற்றும் முன்மொழியப்பட்ட அரச சார்பற்ற தொண்டர் அமைப்புகள் தொடர்பான சட்டம் போன்ற பல புதிய சட்டங்கள் தற்போது இலங்கையின் துடிப்பான சிவில் சமூகம் எதிர்கொள்ளும் ஆபத்துக்களுக்கு கவலையளிக்கும் சான்றுகளாக உள்ளன என்று அவர் சுட்டிக் காட்டுகின்றமை இலங்கையின் உண்மை நிலைமையை பிரதிபலிக்கும் அம்சம் தான்.

கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் மற்றும் அமைதியாக ஒன்று கூடுவதற்கான சுதந்திரம் போன்றவற்றுக்கு எதிராக சிவில், அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச பட்டய சட்ட விதிகளைப் பயன்படுத்தியும், தன்னிச்சையான கைதுகளை முன்னெடுத்தும் அந்தச் சுதந்திரங்களை அடக்கும் முறைமைகள் குறித்து நாம் அதிகம் கவலைப்படுகிறோம் என்று கூறியுள்ள அவர், இவை முறையான குற்றச்சாட்டுகள் அல்லது ஆதாரங்கள் இல்லாமல் முன்னெடுக்கப்படுகின்றன, இந்தப் போக்குக்கு முடிவுகட்ட வேண்டும் என வலியுறுத்துகின்றார்.

அக்னேஸ் கால்மார்ட் அம்மையார் இலங்கையில் இருந்த சமயத்திலேயே, சம்பூரில் முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சிப் பரிமாறிய 'பெருங் குற்றத்துக்காக' மூன்று பெண்கள் உட்பட நால்வரை இரவில் பொலிஸார் வீடு புகுந்து, அவர்கள் கதறக் கதற, இழுத்துச் சென்று, கைது செய்து, சிவில், அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச பட்டய சட்ட விதிகளைப் பயன்படுத்தி விளக்கமறியலில் அடைத்த அராஜம் அரங்கேறியிருந்தது.

அத்தகைய செயல்கள், அத்துமீறல்கள், அடாவடித்தனங்கள் பற்றிய நேரடியான சாட்சியங்கள், ஆதாரங்களை உள்வாங்கிக் கவனத்தில் எடுத்த பின்னர் தான் மேற்படி கருத்துகளை அவர் முன்வைத்திருப்பார் என்பது திண்ணம்.

பல்லாயிரக்கணக்கான மக்களைக் கொன்ற,காயப்படுத்திய, இடம்பெயர வைத்து ஏதிலியாக்கிய அல்லது பலவந்தமாகக் காணாமல் போகச் செய்த மூன்று தசாப்த கால உள்நாட்டு ஆயுதப் போர் முடிவடைந்து 15 வருடங்களைக் குறிக்கும் இந்த ஆண்டு இலங்கைக்கு ஒரு குறிப்பிடத்தக்க காலமாகும் என்று குறிப்பிட்ட அவர், இவ்விடயத்தை ஒட்டிச் சொன்ன ஒரு கருத்து மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றது.

இந்த அம்சத்தில் குற்றமிழைத்தோரை பொறுப்புக் கூற நிறுத்தாமல் தண்டனை விலக்களிப்பைத் தொடர இடமளித்தமை மூலம் அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த அரசுகள் மட்டுமல்ல, தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகள் முதல் எதிர்கட்சித் தலைவர்கள், மத ஸ்தாபனங்கள் மற்றும் தேசிய ஊடகங்கள் வரை தலைமைப் பதவிகளில் இருப்பவர்கள் அனைவருமே கூண்டோடு தோல்வி கண்டுவிட்டனர் என்று வைத்திருக்கின்றார் அவர்.

அது உண்மை. முற்றிலும் உண்மை.

"நாட்டின் அரசியல் தலைமையானது நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்த வேண்டும். அது பிளவுகளை நிவர்த்தி செய்யும். இனங்களுக்கிடையிலான ஒற்றுமையை ஊக்குவிக்கும். இனங்களுக்கு இடையில் அர்த்தமுள்ள ஆற்றுப்படுத்தலுக்கான வழிகளை அது வழங்கும். கடந்த கால தவறுகளை நிவர்த்தி செய்வது அவசியம். புதிய உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை நிறுவுவது குறித்து அரசாங்கம் பரிசீலித்து வரும் அதேவேளையில், நிவர்த்திக்கான சூழலை உருவாக்க நனவான - சாத்தியமான முயற்சியை மேற்கொள்ளுங்கள்." - என்று இலங்கையை விட்டுப் புறப்பட முன்னர் அக்னேஸ் கால்மார்ட் அம்மையார் கூறியிருக்கின்றார்.

பேரினவாத ஆட்சியாளர்களின் காதில் இந்த ஆலோசனைகள் ஏறப் போவதில்லை. கெடுகுடி சொற் கேளாது அல்லவா...?

# ஈரான் ஜனாதிபதி காலமான செய்தி மிகவும் அதிர்ச்சியைத் தருகின்றது!

## முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவர் ஹரீஸ் இரங்கல்



ஈரான் ஜனாதிபதி இப்ராகிம் ரைசி காலமான செய்தி அறிந்து மிகவும் அதிர்ச்சிக்குள்ளானேன். இஸ்லாமிய நாடுகளில் மிகவும் தைரியமான, மனிதாபிமானமிக்க தலைவராக திகழ்ந்த ஈரான் ஜனாதிபதி இப்ராகிம் ரைசி உலங்கு வானூர்தி விபத்தில் காலமான செய்தி மிகவும் கவலைத் தருகிறது.

2021 முதல் ஈரான் ஜனாதிபதியாக வந்த பின்னர் இஸ்லாமிய உலக நாடுகளை ஐக்கிப்படுத்துவதிலும், ஒற்றுமைப்படுத்துவதிலும் முன்னின்றவர். ஈரான், சவூதி அரேபியா உட்பட சில மத்திய கிழக்கு நாடுகளின் உறவு முறிந்திருத்த சூழ்நிலையில் அதனைச் சீர்படுத்தி அந்த நாடுகளுடன் இராஜதந்திர உறவுகளைப் பேணி சகலரையும் ஒற்றுமைப்படுத்தியதில் முதன்மையானவராக ஈரான் ஜனாதிபதி இப்ராகிம் ரைசி திகழ்ந்தார்.

காசா முஸ்லிங்களுக்காக குரல் கொடுத்தது மட்டுமின்றி காசாவுக்கு ஆதரவாக இராணுவ உதவிகளையும், பொருளாதார உதவிகளையும் வழங்கிக் காசா மக்களுக்கு ஆதரவாக பக்க பலமாக ஈரான் ஜனாதிபதி இப்ராகிம் ரைசி நின்றிருந்தார்.

உலகில் இஸ்லாமிய சாம்ராஜ்ஜியங்கள் பலமானதாக ஆயுத ரீதியாகவும் அணு ஆயுத ரீதியாகவும் ஈரானை வளர்த்தெடுக்க உறுதுணையாக இருந்தவர். எமது நாட்டுக்கும் உமா ஓயா திட்டத்தின் ஊடாக மின்சாரம், விவசாயம் போன்ற துறைகளின் மேம்பாட்டுக்கு ஈரான் அரசும், மக்களும் உதவியாக இருந்தார்கள். அதனைத் தொடக்கி வைக்க அண்மையில் இலங்கை வந்த போது அவர் நிகழ்த்திய உரைகள் கனதியானவை.

ஜனாதிபதி ரணிலின் இராப்போசன விருந்தில் ஈரான் ஜனாதிபதி இப்ராகிம் ரைசியை நேரில் சந்தித்த அவரின் கருத்துக்களை செவிமடுத்த அனுபவம் எங்களுக்கு இருக்கிறது.

முஸ்லிங்களின் உரிமைக்காக பேசும் முஸ்லிம் அரசியல்வாதிகளை ஒற்றுமையுடன் செயற்படுமாறும், தான் துஆ செய்வதாகவும் அவர் கூறிய வார்த்தைகளின் நிழல்கள் அவரின் மரணச்செய்தி கேட்ட நிமிடம் முதல் என்னுள் ஊசலாடிக் கொண்டிருக்கின்றன.

காலநிலை காரணமாக விமான பயணங்களை தவிர்த்து இலங்கையில் கூட பாதுகாப்பு எச்சரிக்கையாக இருந்த அவர் இன்று ஹெலியில் சென்று மரணமான செய்தி எனக்கு பேரதிர்ச்சியாக இருக்கிறது.

எங்களின் பெருந்தலைவர் எம்.எச்.எம். அஸ்ரப் இலங்கை முஸ்லிங்களுக்கு முகவரி பெற்றுக்கொடுத்து, முஸ்லிம்களின் குரலாக ஒலித்து கொண்டிருந்தபோது அரநாயக்காவில் விபத்தில் சிக்கி காலமானாரோ அன்றைய நாளை ஒத்த நாளாகவே இன்றைய நாள்களும் எங்களுக்கு உள்ளன.

ஈரான் ஜனாதிபதி இப்ராகிம் ரைசியின் மரண காட்சிகள் எங்கள் பெருந்தலைவர் அஷ்ரபின் மரண காட்சிகளை நினைவுபடுத்துகின்றன.

இஸ்லாமிய மக்களின் குரலாக செயற்பட்ட மர்ஹூம் இப்ராகிம் ரைசி எனும் ஆளுமை எங்களை விட்டு பிரிந்து சென்றுள்ளது. அவர்களின் இழப்பால் ஈரான் மக்கள் மட்டுமல்ல உலக முஸ்லிங்கள் எல்லோரும் இன்று தவித்துபோகியுள்ளனர்.

அவருக்காகவும், அவருடன் இறுதி வரை பயணித்து காலமான அவரது அமைச்சர்கள், அதிகாரிகள், வீரர்கள் எல்லோருக்காகவும் எங்களின் பிராத்தனைகள்.– என்றுள்ளது.

# யாழில் பாணினுள் கண்ணாடித் துண்டுகள்

## பிரபல வெதுப்பகத்துக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை



யாழ்ப்பாணத்தில் பாண் ஒன்றுக்குள் கண்ணாடித் துண்டுகள் காணப்பட்டமையை அடுத்து, பொதுச் சுகாதாரப் பரிசோதகரிடம் முறையிடப்பட்டுள்ள நிலையில், சுகாதாரப் பரிசோதகர் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

மருதனார்மடம் பகுதியில் உள்ள கடையொன்றில் நேற்று ஒருவர் பாண் வாங்கியுள்ளார். அதனை வீட்டில் சாப்பிட முனைந்தபோது, பாணினுள் இருந்து உடைந்த போத்தல் கண்ணாடித் துண்டுகள் காணப்பட்டுள்ளன.

அது தொடர்பில் அந்தப் பகுதி சுகாதாரப் பரிசோதகருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து அவர் முன்னெடுத்த விசாரணைகளில் கடைக்குப் பாண் விநியோகம் செய்தது, சுன்னாகம் பகுதியில் உள்ள பிரபல வெதுப்பகம் எனத் தெரியவந்துள்ளது.

அதனையடுத்து குறித்த வெதுப்பகத்துக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

# கல்முனையில் அஷ்ரப் அருங்காட்சியகத்தின் நிர்மாணப் பணிக்குத் துரிதகதியில் நடவடிக்கை

## அடையாளம் காணப்பட்ட இடத்தில் சிரமதானப்பணி!




(நூருல் ஹுதா உமர் )

இலங்கை தேசத்துக்கும், முஸ்லிம் மக்களுக்கும் அளப்பரிய சேவை களையாற்றிய அரசியல்வாதி எம்.எச். எம்.அஸ்ரப் நினைவு அருங்காட்சியகம் அமைக்கும் பணிகள் துரிதகதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதன் முதல் கட்டமானக சிரமதானப் பணி நேற்று முன்தினம் (20) அவரது சொந்த தொகுதியான கல்முனையில் அடையாளம் காணப்பட்ட காணியில் முன்னெடுக்கப்பட்டது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும், திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எச்.எம்.எம்.ஹரீஸ் முன்னிலையில் கல்முனை மாநகர சபை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், தலைவர் அஷ்ரபின் அபிமானிகள், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முக்கியஸ்தர்களின் பங்குபற்றலுடன் இந்த சிரமதானப்பணி இடம்பெற்றது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகரும் முன்னாள் அமைச்சருமான மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப் ஆற்றிய சேவைகளை கௌரவிக்கும் வகையில் எம்.எச்.எம். அஷ்ரபின் 24 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ் மற்றும் முஸ்லிம் சமூகத்தினரின் வேண்டுகோளுக்கு இணங்க ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பணிப்புரைக்கு அமைவாக "அஷ்ரப் நினைவு அருங் காட்சியகம்" ஒன்றை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்துக்காக 25 மில்லியன் ரூபா முதற்கட்டமாக ஒதுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கான நிர்மாணப் பணிகளை உடனடியாக ஆரம்பிக்குமாறு அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.





# ஒலிவில் பிரதேசத்தில் மீனவர்களின் நன்மை கருதி பொதுக் கிணறு அமைப்பு

(எம்.எப்.றிபாஸ்)

ஒலிவில் பிரதேசத்தில் மீனவர்களின் நன்மை கருதி பொதுக் கிணறு திறந்து வைக்கப்பட்டது.

ரஹ்மத் பவுண்டேஷனின் ஏற்பாட்டில் வை.டப்ள்யூ.எம்.ஏ. பேரவையின் ஒருங்கிணைப்பில் கட்டப்பட்ட இந்தப் பொது கிணறைத் திறந்து வைக்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை(19) இடம்பெற்றது.

கல்முனை மாநகர சபையின் முன்னாள் பிரதி முதல்வரும், ரஹ்மத் பவுண்டேஷனின் ஸ்தாபகருமான ரஹ்மத் மன்சூரின் வழிகாட்டலின் கீழ் இடம்பெற்ற நிகழ்வுக்கு இலங்கைக்கான மலேசிய தூதர் எச்.இ. பட்லி ஹிஷாம் ஆதம் பிரதம அதிதியாகவும், வை. டப்ளியூ.எம்.ஏ. அமைப்பின் தலைவி பவாஸா தாஹா கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

ஒலுவில் வெளிச்ச வீட்டுக்கு அருகாமையில் மீனவர் தொழிலில் ஈடுபடும் மீனவர்கள், பொதுமக்கள் என பலரும் இப் பொது கிணற்றை பயன்படுத்துவர்.

நிகழ்வில் கலந்து கொண்ட அதிதிகளால் கிணற்றுக்கு அருகாமையில் தென்னை மரக்கன்றும் நட்டி வைக்கப்பட்டது.



# தாண்டியடி மக்களின் நலன் கருதி வைத்திய சேவைகள் ஆரம்பிப்பு!

**(எம்.எம்.ஜெஸ்மின்)**

பொத்துவில் தொகுதியின் அதி கஷ்டப் பிரதேசமான தாண்டியடி பொது மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க பிராந்திய வைத்திய சேவைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.



கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி டாக்டர் சகீலா இஸ்ஸடீன் மற்றும் திட்டமிடல் வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சி.மாஹீர் ஆகியோரின் பணிப்புரையின் பேரில் திருக்கோவில் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் பீ.மோகனகாந்தன் திருக்கோவில் ஆதார வைத்தியசாலையின் உதவியுடன் தாண்டியடியில் பிராந்திய வைத்திய சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவ் வைத்திய சேவையானது வாரத்தில் இரு நாள்கள் செவ்வாய் மற்றும் சனி ஆகிய நாளகளில் காலையில் ஆரம்பிக்கப்பட்டு நண்பகல் வரை நடைபெறும் என திருக்கோவில் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் மோகனகாந்தன் தெரிவித்தார்.

# பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவில் ஐஸ் போதையுடன் ஒருவர் கைதானார்

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

கல்முனை, மருதமுனை பிரதேசத்திலுள்ள பாடசாலை மாணவர்களுக்கு ஐஸ் போதைப் பொருள்களை மிகவும் சூட்சுமமான முறையில் விற்பனை செய்து வந்தார் என்ற குற்றச்சாட்டில் 24 வயதுடைய சந்தேக நபர் ஒருவரை பெரிய நீலாவணை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மருதமுனை, பெரிய நீலாவணை பிரதேசத்தில் சந்தேகத்துக்கு இடமான நிலையில் நடமாடிய இளைஞர் ஒருவரைத் திடீரெனச் சோதனையிட்ட போது அவரிடம் இருந்து 2 கிராம், 360 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர் அந்தப் பிரதேச பாடசாலை மாணவர்களுக்கு சூட்சுமமான முறையில் போதைப் பொருட்களை விற்பனை செய்து வந்துள்ளார் என்று ஆரம்ப கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் தொடர்பில் பெரிய நீலாவணை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜே.எஸ்.கே.வீரசிங்கவின் வழிகாட்டலில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.







# வீதியைத் திருத்தியமைத்துத் தருமாறு

## என்.சி. தோட்டத்து மக்கள் கோரிக்கை



(பொகவந்தலாவ)

பொகவந்தலாவ செப்பல்டன் என்.சி.தோட்டத்துக்குச் செல்லும் பிரதான வீதியை மலையக அரசியல்வாதிகள் எவரும் கண்டுகொள்ளவில்லை என்று மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

என்.சி. தோட்டத்துக்குச் செல்லும் பிரதான வீதியைச் செப்பனிட்டு தருமாறு பிரதேசமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நோர்வூட் பிரதேச சபைக்கு உட்பட்ட பொகவந்தலாவ செப்பல்டன் என்.சி. தோட்ட மக்கள் தமது பிரதான போக்குவரத்துக்குப் பயன்படுத்தும் இந்த என்.சி. தோட்டத்துக்குச் செல்லும் பாதை நீண்ட காலமாகச் செப்பனிடாமல் குன்றும் குழியுமாகக் கானப்படுகின்றமையால் குறித்த தோட்ட மக்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள், வாகனச் சாரதிகள், கற்பிணித் தாய்மார்கள் நாளாந்தம் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இந்த வீதி ஹட்டன் – பொகவந்தலாவ பிரதான வீதியின் பொகவந்தலாவ செப்பல்டன் சந்தியில் இருந்து மூன்று கீலோ மீற்றர் தூரத்தை கொண்டுள்ளது. இந்த வீதியைச் செப்பனிட்டு தருமாறு மலையக அரசியல்வாதிகளிடம் பலமுறை கோரிக்கை விடுத்துள்ள போது எவரும் கண்டுகொள்ளவில்லை என்று பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

# நல்லூரில் ஆரம்பமாகவுள்ள யோகக் கலை கற்கை நெறி!

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகால் உடல், உள மேம்பாட்டுக்காக இலவசமாக நடத்தப்பட்டுவரும் யோகக்கலை அடிப்படை கற்கை நெறியின் புதிய பிரிவு நல்லூர்க் கந்தன் ஆலய பின் வீதியில் அமைந்துள்ள நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமை காலை 6 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

சனி, ஞாயிறு தினங்களிலும் அரச விடுமுறை தினங்களிலும் காலை 6 மணி முதல் காலை 8 மணிவரை நடைபெறும் இந்த வகுப்புகளில் ஆர்வமுள்ள ஆண்கள், பெண்கள் இருபாலாரும் வயது வேறுபாடின்றி கலந்துகொள்ள முடியும்.

சுமார் மூன்று மாத காலங்களைக் கொண்டமைந்த இந்த அடிப்படைக் கற்கை நெறியை பூரணமாக முடிப்பவர்களுக்கு கல்வி அமைச்சால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

பயிலவிரும்புவோர் அன்றைய தினம் நேரடியாக வந்து பதிவுகளை மேற்கொண்டு வகுப்பில் இணைந்து கொள்ள முடியும்.

மேலதிக தகவல்களை 021 222 2203 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம் எனவும் கல்வி அமைச்சின் செயலாளர் ம. பற்றிக் டிறஞ்சன் அறிவித்துள்ளார்.



# வாழும் கலை அறக்கட்டளை செயற்பாடுகளை மலையகத்திலும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை

(ஆ.ரமேஸ்)

இலங்கையில் மலையகத்திலும் வாழும் கலை அறக்கட்டளை நிறுவக செயற்பாடுகளை ஆரம்பிக்க இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் முன்வைத்த வேண்டுகோளுக்கு உதவுவேன் என்று ஆன்மீக குரு, அமைதி தலைவர், வாழும் கலை பயிற்சி அறக்கட்டளை நிலையத்தின் ஸ்தாபகர் ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் குருஜி நுவரெலியாவில் தெரிவித்தார்.

இலங்கையில் வரலாற்றுக்குரிய நுவரெலியா சீத்தா எளிய பிரதேசத்தில் அமைந்துள்ள சீதையம்மன் ஆலயத்தின் மஹாகும்பாபிஷேக பெருஞ்சாந்தி விழாவில் கலந்து கொண்டு, ஆசி வழங்க இந்தியாவில் இருந்து ஆன்மீக குரு அமைதி தலைவர், வாழும் கலை பயிற்சி அறக்கட்டளை நிலையத்தின் தாபகர் ஶ்ரீ ஶ்ரீ ரவிசங்கர் குருஜி வருகை தந்தார்.



அவர் நுவரெலியாவுக்கு விஜயத்தை மேற்கொண்டு சீத்தா எளிய அம்மன் ஆலய மஹா கும்பாபிஷேக நிகழ்வில் கலந்து கொண்டு ஆசியும் வழங்கினார்.

பின்னர் நுவரெலியா கிறேண்ட விடுதியில், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொது செயலாளர் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி நீர் வளங்கள் அமைச்சர் ஜீவன் தொண்டமானின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த விசேட சந்திப்பில் கலந்து கொண்டார்.

இந்தச் சந்திப்பில் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் காங்கிரஸின் தவிசாளருமான மருதபாண்டி ராமேஷ்வரன், பி.இராஜதுறை, பாரத் அருள்சாமி உள்ளிட்ட இ.தொ.கா. உயர்பீட உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இந்தச் சந்திப்பில் விசேடமாக கலந்து கொண்ட குருஜியிடம் இலங்கையில் மலையக மக்களின் நலத்திட்டத்துக்காகப் பல கோரிக்கைகளை முன் வைக்கப்பட்டன.

இவ்வாறு முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை ஏற்றுக்கொண்ட குருஜி, வாழும் கலை அறக்கட்டளை அமைப்பின் செயற்பாட்டை மலையகத்திலும் பலப்படுத்த ஒத்துழைப்பு வழங்குவார் என்றும், பயிற்சி நிலையங்களை ஆரம்பிக்க இடங்கள் உள்ளிட்ட வசதிகளை எதிர் பார்ப்பதாகவும் இதற்கான உதவிகளை தனது அறக்கட்டளை நிறுவகம் ஊடாக வழங்குவார் என்றும் தெரிவித்தார்.

அத்துடன் ஆன்மீக கற்கை நெறி பாடசாலைகள் ஆரம்பித்தல், வாழும் கலை பயிற்சிகள், பெண்களுக்கான சுய தொழில் ஊக்குவிப்புகள், உள்ளிட்ட பல்வேறு உதவிகளை தனது அறக்கட்டளை ஊடாக செய்து தருவதாகவும் குருஜி இதன் போது தெரிவித்தார்.



# சமூக விடுதலை போராளி! மக்கள் இலக்கிய சிருஷ்டி!! தெணியான்

- ஐங்கரன் விக்கினேஸ்வரா -

*(நலிந்து துன்பப்படும் மக்கள் தமது பிரச்சினைகளைத் தெளிவாக விளங்கிக் கொண்டு அவைகளில் இருந்து விடுபடுவதற்குரிய உணர்வு பூர்வமான பிரக்ஞையை அவர்களுக் கூட்ட வேண்டும் என்பதே தெணியானின் எழுத்தின் குறிக்கோளாக இருந்தது. அவரின் இரண்டாவது நினைவு தினம் (மே 22) இன்றாகும்.)*

தமிழ் எழுத்துத் துறையில் கால் பதித்து ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக சமூகப் போராளியாக விளங்கியவர். தெணியானின் எழுத்துக்களை மிகநீண்ட காலமாக உன்னிப்பாக அவதானித்தால் ஈழத்தின் தலைசிறந்த இலக்கிய சிருஷ்டியாகவே அவர் வரலாற்றில் தடம்பதித்துள்ளார்.

ஈழத்துப் படைப்பிலக்கிய வரலாற்றில் “தெணியான்” என்ற பெயர் ஆழப்பதிந்துள்ளமை என்பது இன்று வரலாற்றுச் சான்றாகுயுள்ளது.



சமூகக் கொடுமைகளைக் கண்டு கொதித்து, அவற்றைத் தமது படைப்புகளாகத் தந்த எழுத்தாளர் தெணியான், குறிப்பாக சாதி அமைப்பின் அவலங்கள் குறித்து மிக அதிகமான எண்ணிக்கையிலான சிறுகதைகளைப் படைத்த எழுத்தாளர் என்ற சிறப்பையும் பெறுபவர். 1964 இல் ‘விவேகி’ சிற்றிதழில் வெளிவந்த ‘பிணைப்பு’ எனும் சிறுகதையுடன் இவரது எழுத்துலகப் பிரவேசம் ஆரம்பமானது. பொலிகண்டி கிராமத்தின் ‘தெணி’ என்னும் பகுதியில் சந்ததி சந்ததியாகப் பல காலம் வாழ்ந்துவந்த இவரது குடும்பத்தவர்களை ஊரவர்கள் ‘தெணியார்’ என அழைக்கும் வழக்கம் இருந்தமையால், ‘தெணியான்’ என்ற புனைபெயரையே இவரும் தமதாக்கிக்கொண்டார்.

சுமார் 150 சிறுகதைகள், 30 கவிதைகள், 8 நாவல்கள், 3 குறுநாவல்கள், 5 வானொலி நாடகங்கள், 100க்கும் மேற்பட்ட கட்டுரைகள், விமர்சனங்கள், செவ்விகள் என்பன இவரது படைப்புலக அறுவடைகள்.

ஒடுக்கப்பட்ட சமுதாய மக்கள் மத்தியில் அவர்களுள் ஒருவராகவே தெணியான் வாழ்ந்து கொண்டிருந்து, மக்கள் இலக்கியத்தைப் படைத்துள்ளார். ‘விடிவை நோக்கி’ வீரகேசரி வெளியீடு, கொழும்பு (1973), ‘கழுகுகள்’ நர்மதா வெளியீடு, சென்னை (1981), ‘பொற்சிறையில் வாடும் புனிதர்கள்’ முரசொலி வெளியீடு, யாழ்ப்பாணம் (1989), ‘மரக்கொக்கு’ நான்காவது பரிமாணம் வெளியீடு, கனடா (1994), ‘காத்திருப்பு’ பூபாலசிங்கம் புத்தகசாலை வெளியீடு, கொழும்பு (1999), ‘கானலின் மான்’ பூபாலசிங்கம் புத்தகசாலை வெளியீடு, கொழும்பு (2002), ‘தவறிப்போனவன் கதை’ கொடகே சகோதரர்கள் வெளியீடு, கொழும்பு (2010), ‘குடிமைகள்’ ஜீவநதி வெளியீடு, அல்வாய் (2013) என்பன அவரது நாவல்கள்.

தெணியானின் படைப்புக்கள் வெறும் கற்பனை மனிதர்களைப் பாத்திரங்களாக உருவாக்கி நடமாட விடுவதில்லை. அவருடைய படைப்புக்கள் யதார்த்தமானவை. நிதர்சனமான காலக் கண்ணாடிகளே அவரின் படைப்புக்கள். ‘சிதைவுகள்’ மீரா பதிப்பக வெளியீடு, கொழும்பு (2003), ‘பனையின் நிழல்’ மயூரன் நினைவு வெளியீடு, அல்வாய் (2006) ஆகியன குறுநாவல்கள்.

‘சொத்து’ என்.சி.பி.எச். வெளியீடு, சென்னை (1984), ‘மாத்து வேட்டி’ மல்லிகைப் பந்தல் வெளியீடு, யாழ்ப்பாணம் (1996), ‘இன்னொரு புதிய கோணம்’ பூமகள் வெளியீடு, கொற்றாவத்தை (2007), ‘ஒடுக்கப்பட்டவர்கள்’ பூபாலசிங்கம் புத்தகசாலை வெளியீடு, கொழும்பு (2010), ‘தெணியான் ஜீவநதிச் சிறுகதைகள்’ ஜீவநதி வெளியீடு, அல்வாய் (2012) என்பன தெணியானின் இதுவரை வெளிவந்த சிறுகதைத் தொகுதிகளாகும்.

எந்தக் காலத்திலும், எத்தகைய சூழ்நிலையிலும், தாயக மண்ணை, தமிழ் மக்களை விட்டுத் தூரவிலகி ஓடிப்போகாத ஒருவரே தெணியான். ‘இன்னும் சொல்லாதவை’ வாழ்வனுபவங்கள், எழுத்து வெளியீடு, மதுரை (2011), ‘நெஞ்சில் பதிந்துள்ள நினைவுகளில் பேராசிரியர் கா. சிவத்தம்பி’ குமரன் புத்தக இல்லம், கொழும்பு (2012), ‘பூச்சியம், பூச்சியமல்ல’ இலக்கிய அனுபவங்கள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட்., சென்னை (2013), ‘மனச்சோடு பழகும் மல்லிகை ஜீவா’ ஹப்பி டிஜிரல் சென்ரர் வெளியீடு, கொழும்பு (2014) என்பன தெணியானின் கட்டுரைத் திரட்டுக்களாகும். மேலும் ‘டொமினிக் ஜீவாவின் ‘ஈழத்தில் இருந்து ஓர் இலக்கியக் குரல்,’ ‘தேவரையாளி’ இரண்டு வெளியீடுகள், ‘மல்லிகை ஜீவா’ (இணையாசிரியர்), ‘அரும்புகளின் கீதங்கள்’, ‘மூடிமறைக்காதீர்’ என்பன தெணியான் இதுவரை தொகுத்து வழங்கிய நூல்களாகும்.

அவர் ஆரம்பகாலம் முதல் இன்றுவரை தான் வரிந்து கொண்ட கொள்கையில் இருந்து தளம்பாது நேரிய நோக்குடன் இருந்து வருபவர். அதனால் இந்தச் சமுதாயத்தில் இருக்கும் யதார்த்தமான பிரச்சினைகளே தெணியானது இலக்கியங்களாகப் பிறந்தன.

வாழ்நாள் இலக்கியப் பணிக்கென இலங்கை

தொடர்ச்சி▼

# சமூக விடுதலை போராளி! மக்கள் இலக்கிய சிருஷ்டி!!

# தெணியான்

தொடர்ச்சி▲


அரசு 'சாகித்திய ரத்னா' (2013), இலங்கை இந்து கலாச்சார அமைச்சு 'கலாபூஷணம்' (2003), வடக்கு மாகாணக் கலாச்சாரத்துறை இலக்கியத்திற்கான ஆளுனர் விருது (2008) என்பவற்றை வழங்கி தெணியானைக் கௌரவித்துள்ளன.

ஏற்றத் தாழ்வற்ற ஒரு சமுதாயமே தெணியானது இலட்சியம். இந்தச் சமுதாயத்தை வென்றெடுப்பதற்கான உந்து சக்தியாக இலக்கியத்தைக் கருதும் தெணியான், ஒடுக்கப்பட்டோர் அழகியலைத் தமது ஆக்கத்திறன் மூலம் தொடர்ந்தும் அழகுபடுத்தி வந்தவர். இவற்றின் பெறுபேறாக, ஈழத் தமிழ் இலக்கியப் பரப்பில் விசேட கவனிப்புக்கு உரிய ஆற்றல் மிகு படைப்பாளியாக இன்றுவரை கணிக்கப்படுபவராவார். ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைப் போராட்டங்களை மிகுந்த அக்கறையுடன் அவதானித்து இலக்கியங்களை படைத்தவர் தெணியான்.

அடக்கப்பட்ட மக்களின் அவலங்களை எல்லோரும் அறியும் வண்ணம் சுட்டிக் காட்டி வெளியே வருவதை நோக்கமாகக் கொண்டு எழுதியவர் தெணியான். தெணியானின் நாவல்களான 'கழுகுகள்' நாவல் 'தகவம்' பரிசையும், 'மரக்கொக்கு' இலங்கை அரசினதும் வடக்கு, கிழக்கு மாகாணங்களது சாகித்திய விருதுகளையும், தேசிய இலக்கியப் பேரவைப் பரிசையும் பெற்றது.

'காத்திருப்பு' வடக்கு, கிழக்கு மாகாணங்களது பரிசுகளையும், 'கானலின் மான்' இலங்கை அரசினது சாகித்திய விருதையும், தேசிய கலை இலக்கியப் பேரவைப் பரிசையும் பெற்றன.

'குடிமைகள்' இலங்கை அரசின் சாகித்திய விருதையும் 'கொடகே' விருதையும் 'சிதைவுகள்' குறுநாவல் தேசிய கலை இலக்கியப் பேரவைப் பரிசையும், சுபமங்களா பரிசையும், 'ஒடுக்கப்பட்டவர்கள்' சிறுகதைத் தொகுதி 'கொடகே' விருதையும் பெற்ற படைப்புகளாகும்.







நலிந்து துன்பப்படும் மக்கள் தமது பிரச்சினைகளைத் தெளிவாக விளங்கிக் கொண்டு அவைகளில் இருந்து விடுபடுவதற்கு உரிய உணர்வு பூர்வமான பிரக்ஞையை அவர்களுக் கூட்ட வேண்டும் என்பதே தெணியானின் எழுத்தின் குறிக்கோளாக இருந்தது.

தெணியான், சிறுபராயத்தில் இருந்தே மார்க்சியக் கோட்பாட்டில் நாட்டம் கொண்டவர். இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் தளகர்த்தர்களுள் ஒருவராக விளங்கியவர். சிறுபான்மைத் தமிழர் மகா சபையில் இணைந்து, ஆலயப் பிரவேசம், தேனீர்க்கடைப் பிரவேசம் போன்ற பன்முகப்பட்ட சாதிய எதிர்ப்புப் போராட்டங்களில் நேரடியாகப் பங்கு கொண்ட ஒரு சமூக விடுதலைப் போராளி. ஏற்றத் தாழ்வற்ற ஒரு சமுதாயமே தெணியானது இலட்சியமாக விளங்கியது.

அடக்கி, ஒடுக்கப்பட்ட இந்தச் சமுதாயத்தை வென்றெடுப்பதற்கான உந்து சக்தியாகத் தெணியானை சாதிப் பிரச்சினை தவிர வேறெதையும் எழுத முடியாதவர் எனச் சிலர் விமர்சித்துள்ளனர். ஆயினும் தெணியானின் எழுத்துக்களை படித்தவர்களுக்கு இந்தப் பிரச்சினையை அவர் எவ்வளவு நிதானமாக பதிவு செய்திருக்கிறார் என் ப து

தொடர்ச்சி▼

# சமூக விடுதலை போராளி! மக்கள் இலக்கிய சிருஷ்டி!!

# தெணியான்

தொடர்ச்சி▲

புலப்படும்.

யதார்த்த நிதானம் தவறிக் கொட்டியமும் சில படைப்புக்களிடையே தெணியானின் நிதர்சன எழுத்தின், யதார்த்த படைப்பின் தனித்துவத்தைப் புரிந்து கொள்ளலாம்.

தெணியான் உண்மையில் அவர் சாதியம் பற்றி மட்டும் எழுதிய எழுத்தாளர் அல்ல. மனிதரின் வாழ்வியல் பற்றிப் புரிந்துணர்வோடு எழுதும் எழுத்தாளராக தன்னை விரிவுபடுத்தியுள்ளமை தெரிகிறது, சாதியால் இழிவுபடுத்தப்பட்டவர்கள் பற்றியும் தெணியானின் எழுத்துக்களில் காணலாம். அத்துடன் பொருளாதார ரீதியாக அடக்கப்பட்டவர்கள் பற்றியும் தெணியானின் எழுத்துக்களில் காணலாம். இனரீதியாகத் துன்பத்துக்கு ஆளாக்கும் தமிழரின் தேசிய பிரச்சினை பற்றியும் தெணியான் பல படைப்புக்களை எழுதியுள்ளார்.

தெணியானின் ஆக்கங்களாக வெளிவந்த படைப்புக்கள் அனைத்தும் ஆய்வாளர்களின் சிந்தனைகளைக் கிளறிவிட்டுள்ளன எனக் கூறலாம்.

படைப்பியல் இலக்கியம் வெறும் பொழுது போக்குக்கான சாதனமன்று. ஆழ்ந்த சமூக நோக்குடன் எழுத்தாளன் சொல்லுவது தனது தனிப்பட்ட, சமூக ரீதியான வாழ்க்கையின் நடைமுறைச் செயற்பாட்டினது சத்தியமான வெளிப்பாடாகவும் இருக்க வேண்டும் என்பதில் உறுதியானவர் தெணியான்.

மறைந்த தெணியான் ஆரம்பக் காலம் முதலே இடதுசாரி முற்போக்கு சிந்தனைகளோடும் அவை சார்ந்த போராட்டங்களோடும் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டவர். தாழ்த்தப்பட்ட மக்கள் போராட்டங்களோடு தன்னை இணைத்துக் கொண்டு அவர் தனது எழுத்தையும் சமூக மாற்றத்தையும், சீரமைப்பிற்காகக் கூறிய ஆயுதமா-கவே பயன்படுத்தியுள்ளார்.

இருண்மையில் இடர்ப்பட்டு இருந்தவர்களையும் உலுப்பியெழுப்பி ஆர்வமுடன் காது கொடுக்க வைக்கும் பேச்சுக் கலையும் தெணியானின் கைவந்த கலையாகும்.

# கதிர்காமத்தில் ஆடிவேல் திருவிழாவுக்கு வெள்ளியன்று கன்னிக்கால் நடும் சடங்கு !



(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற கதிர்காமம் கந்தன் ஆலயத்தின் வருடாந்த ஆடிவேல் விழா உற்சவத்தின் மாங்கல்ய சடங்கு கன்னிக்கால் அல்லது முகூர்த்த கால் அல்லது பந்தல்கால் நடும் நிகழ்வு நாளை மறுதினம் (24) வெள்ளிக் கிழமை அதிகாலை நடைபெறவுள்ளது.

கதிர்காம கந்தன் ஆலயத்தின் பஸ்நாயக்க நிலமே டிஷான் குண சேகர தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

முகூர்த்தத்தில் நாளை அதிகாலை, பழங்கால முறைப்படி வெட்டப்பட்ட கம்புகள், மாணிக்க ஆற்றில் குளிப்பாட்டப்பட்டு, நாளை இரவு வள்ளி அம்பாள் திருக்கோவில் வைக்கப்பட்டு நாளை மறுதினம் காலை சுப முகூர்த்தத்தில் வள்ளி அம்மன் ஆலயத்தில் இருந்து குழுவினர் கந்தன் ஆலயத்துக்கு எடுத்துச் செல்வார்கள்.

கதிர்காமம் பெரிய ஆலயத்தில் இந்தக் கன்னிக்கால் அதிகாலையில் நிலமே முன்னிலையில் பக்தி பூர்வமாக பாரம்பரிய கலாசார மரபு முறைப்படி நடப்படும்.

அதன்படி, நாளை மறுதினம் முதல் 45 நாள்களுக்குப் பின்னர் ஆடி வேல் திருவிழா ஜூலை 06 ஆம் திகதி ஆரம்பமாகி, ஜூலை 21 ஆம் திகதி வரை ஊர்வலம் வரும். ஜூலை 22ஆம் திகதி காலை மாணிக்க கங்கையில் தீர்த்தத்துடன் நிறைவடையும்.

# மன்னார்-முருங்கன் பிரதான வீதியில் திடீரென வந்த யானையால் பதற்றம்!






(மன்னார்)

மன்னார் – மதவாச்சி பிரதான வீதி, முருங்கன் பகுதியில் காட்டு யானை ஒன்று இன்று புதன்கிழமை (22) காலை திடீரென வீதிக்கு வந்தமையால் குறித்த வீதியூடான போக்குவரத்து சிறிது நேரம் பாதிக்கப்பட்டிருந்தது.

முருங்கன் பண்ணையின் பின் பகுதி ஊடாக வந்த யானை பண்ணையின் முன் பகுதிக்கு வந்து பண்ணையின் சுற்று வேலியை உடைத்துக் கொண்டு மன்னார்-முருகன் பிரதான வீதிக்கு வந்து சிறிது நேரத்தின் பின் வீதியை கடந்தது.

இதனால் அந்த வீதியூடான போக்குவரத்து சிறிது நேரம் பாதிக்கப்பட்டிருந்தது. பின்னர் யானை காட்டு பகுதிக்குள் சென்றது.

கடந்த சில நாள்களாக மன்னார் மதவாச்சி பிரதான வீதியில் இரவு, பகல் பாராது யானையின் திடீர் நடமாட்டம் அதிகரித்துள்ள நிலையில் மக்களை அவதானமாகப் பயணிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.




# இணுவில் மக்லியோட் ஆஸ்பத்திரிக்கு கருவள சிகிச்சைக்குச் சர்வதேச விருது!

கருவள சிகிச்சையைச் சிறந்த முறையில் இலங்கையில் முன்னெடுக்கும் வைத்தியசாலையாக இணுவில் மக்லியோட் வைத்தியசாலை தெரிவு செய்யப்பட்டு அதற்கு சர்வதேச விருது வழங்கிவைக்கப்படுள்ளது.

டீறுஐமு என்ற அமெரிக்காவைச் சேர்ந்த அமைப்பால் குறித்த விருது வழங்கிவைக்கப்பட்டது.

இந்த விருது வழங்கும் நிகழ்வு அண்மையில் கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் இடம்பெற்றது.

இலங்கையின் வடக்கு மாகாணத்தில் கருவள சிகிச்சையைச் (IVF) சிறந்த முறையில் முன்னெடுக்கும் வைத்தியசாலையாக இந்த வைத்தியசாலை 10 சர்வதேச நாடுகளால் தெரிவு செய்யப்பட்டு இவ் விருது வழங்கி வைக்கப்பட்டது.

இந்த விருது வழங்கும் விழாவில் சர்வதேச நாடுகளின் பிரநிதிகள், அரசியல் பிராமுகர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இந்த வைத்தியசாலை 126 வருடம் பழமை வாய்ந்த வைத்திய சாலையாக காணப்படுகிறது. தற்பொழுது அந்த வைத்தியசாலையை குழந்தை சத்திர சிகிச்சை வைத்திய நிபுணர் பா.சயந்தன் நிர்வகித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# பாகிஸ்தானில் இருந்து வருகின்ற உத்தரவுக்காகக் காத்திருந்தோம்!

## குஜராத்தில் கைதான இலங்கையைச் சேர்ந்த 4 ஐ.எஸ். பயங்கரவாதிகள் திடுக்கிடும் தகவல்

ஆமதாபாத்,மே22

பயங்கரவாத தாக்குதல் நடத்த பாகிஸ்தானில் இருந்து வரும் உத்தர வுக்காக காத்திருந்தனர் என குஜராத்தில் கைதான இலங்கை ஐ.எஸ். தீவிரவா திகள் தெரிவித்துள்ளனர்.

குஜராத்தின் ஆமதாபாத் விமான நிலையத்தில் தீவிரவாதிகள் 4 பேர் அதிரடியாக கைது செய்யப்பட்டனர். இலங்கையில் இருந்து சென்னை வந்து அவர்கள் குஜராத் சென்ற னர்.

தீவிரவாதிகள் அனைவரும் இலங் கையை சேர்ந்த முகம்மது நஸ்ரத் (வயது 35), முகம்மது பாரூக் (35), முகம்மது நப்ரன் (27), முகம்மது ரஸ் தீன் (43) என்றும், அவர்கள் ஐ.எஸ். தீவிரவாதிகள் என்பதும் தெரியவந்தது. அவர்களிடம் இருந்து 3 துப்பாக்கிகளும், தோட்டாக்களும் சிக்கின. பாகிஸ்தான் பயங்கரவாத அமைப்புடன் தொடர்பு டைய 4 பேரும் இந்தியாவில் நாச வேலையை அரங்கேற்ற திட்டமிட்டது தெரியவந்தது.

இதற்கிடையே கைதான 4 பேரும் பரபரப்பு வாக்குமூலம் அளித்து உள் ளனர். இதுகுறித்து பயங்கரவாத தடுப்பு பிரிவு போலீஸ் சூப்பிரண்டு சுனில் ஜோஷி கூறுகையில், “பயங்கரவாதி களிடம் நடத்திய விசாரணையில், எந்த இடத்தில் வெடிகுண்டு தாக்குதல் நடத்த திட்டமிட்டு உள்ளனர் என்று கூற மறுத்துவிட்டனர். இருப்பினும், தாக்குதல் நடத்தும் இடம், நேரம் பற்றியும், நாச வேலைக்கான வெடிபொருள்கள் கிடைக் கும் இடம் குறித்தும் பாகிஸ்தானில் இருந்து பயங்கரவாதி தெரிவிப்பார். அவரது உத்தரவுக்காக காத்திருந்ததாக வாக்குமூலம் அளித்தனர். கைதான 4 பேருக்கும் 14 நாள்கள் பொலிஸ் காவல் அளிக்கப்பட்டு உள்ளது. சிக்கிய செல்போன்களில் உள்ள தகவல்களை சேகரித்து வருகிறோம். பிடிபட்டவர்க ளுடன் தொடர்பில் உள்ளவர்களிடமும் விசாரிக்கப்படும். பயங்கரவாதிகள் இலங்கையில் இருந்து தமிழ்நாடு வழி யாக குஜராத் வந்துள்ளனர். எனவே குஜராத் பொலிஸாருடன் இணைந்து தமிழ்நாடு மற்றும் மற்ற மாநில பொலி ஸாரும் சேர்ந்து விசாரணையை தீவிரப் படுத்துவோம். மத்திய புலனாய்வு அமைப்பின் உதவியையும் நாடுவோம்” - என்று அவர் கூறினார்.

# காற்றழுத்தத் தாழ்வுப்பகுதி வங்கக்கடலில் உருவானது


சென்னை,மே22

தென்மேற்கு மற்றும் மத்திய மேற்கு வங்கக் கடல் பகுதியில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி உரு வாகியுள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் அறி வித்துள்ளது.

தமிழகத்தில் கடந்த ஏப்ரல் மாதம் முதல் கோடை வெயில் சுட்டெரித்து வந்தது. இதற்கிடையே கடந்த 4 ஆம் திகதி ‘அக்னி நட்சத்திரம்’ எனப்படும் கத்திரி வெயிலும் தொடங்கியது. கத்திரி வெயில் தொடங்கிய பின்னர் வெயில் தாக்கம் அதிகரித்தது.

இதற்கிடையே கடந்த சில நாள்களாக தமிழக உள் மாவட்டங்களில் பெரும்பாலான இடங்களிலும், கடலோர மாவட்டங்களில் அனேக இடங்களிலும் மிதமானது முதல் கனமழை பெய்து வருகிறது. புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் மழை பெய்தது. இதையடுத்து வங்கக்கடலில் இன்று காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாகக்கூடும் என வானிலை ஆய்வு மையம் அறிவித்து இருந்தது.

அதன்படி, தென்மேற்கு மற்றும் மத்திய மேற்கு வங்கக் கடல் பகுதியில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாகியுள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. இந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி வடகிழக்கு திசையில் நகர்ந்து, நாளை மறுதினம் 24 ஆம் திகதி காலை காற்றழுத்த தாழ்வு மண்டலமாக, மத்திய வங்கக்கடல் பகுதிகளில் நிலவக்கூடும். அதன் பிறகு, இது மேலும் வலுப்பெற்று வடகிழக்கு திசையில் நகரக்கூடும் எனவும் தெரிவித்துள்ளது.



இந்த ஆண்டின் முதல் காற்றழுத்த தாழ்வுப்பகுதி இதுவாகும். இதனால் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் இன்றும் நாளையும் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

### பாலஸ்தீனை தனி நாடாக அங்கீகரிப்பதால்

# நோர்வே, அயர்லாந்தில் இருந்து தூதர்களை விலக்கும் இஸ்ரேல்!

### ஸ்பெயினுடனும் முரண்படத் தயாராகும் ஜெருசலேம்

ஜெருசலேம்,மே22

பாலஸ்தீன் அரசுக்கு அங்கீகாரம் வழங்குவதாகக் கூறிய நோர்வே மற்றும் அயர்லாந்தில் இருந்து தங்கள் நாட்டின் தூதர்களை திரும்ப பெறுவதாக இஸ்ரேல் அறிவித்துள்ளது.

இஸ்ரேல்-காசா போர் கடந்த 7 மாதங்களை தாண்டியும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இந்த போரை முடிவுக்கு கொண்டு வர பாலஸ்தீனை தனி நாடாக அறிவிப்பதே ஒரே தீர்வாக அமையும் என பல்வேறு ஐரோப்பிய நாடுகள் கூறி வருகின்றன.

இந்நிலையில் ஐரோப்பிய ஒன்றியத்தில் உறுப்பினராக இல்லாத நோர்வே அரசாங்கம், வரும் 28 ஆம் திகதி பாலஸ்தீனை தனி நாடாக அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்க முடிவு செய்துள்ளதாக தெரிவித்துள்ளது. இது குறித்து நோர்வே பிரதமர் ஜோனாஸ்



கார் கூறுகையில், "பாலஸ்தீனுக்கு அங்கீகாரம் அளிக்காவிட்டால் மத்திய கிழக்கில் அமைதி ஏற்படாது. தனி நாடாக செயல்படுவதற்கான உரிமை பாலஸ்தீனுக்கு உள்ளது" என்று தெரிவித்தார்.

அதே போல் அயர்லாந்து அரசாங்கமும் பாலஸ்தீனை தனி நாடாக அங்கீகரிக்க முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்த நிலையில், நோர்வே மற்றும் அயர்லாந்தில் இருந்து தங்கள் நாட்டின் தூதர்களை திரும்ப பெற்றுக் கொள்வதாக இஸ்ரேல் அறிவித்துள்ளது.

இது குறித்து இஸ்ரேல் வெளியுறவுத்துறை மந்திரி காட்ஸ் கூறுகையில், "பயங்கரவாதத்திற்கு பலன் இருக்கிறது என்ற செய்தியை அயர்லாந்து மற்றும் நோர்வே அரசுகள் இந்த உலகிற்கு சொல்ல வருகின்றன. பாலஸ்தீனுக்கு அங்கீகாரம் வழங்குவது, காசாவில் அடைக்கப்பட்டிருக்கும் இஸ்ரேலின் பணயக்கைதிகளை மீட்கும் முயற்சிகளுக்கு இடையூறாக இருக்கக்கூடும். ஸ்பெயின் அரசாங்கமும் இதே முடிவை எடுக்குமானால், ஸ்பெயின் நாட்டிற்கான இஸ்ரேலின் தூதரையும் திரும்ப பெறுவோம்" என்று தெரிவித்தார்.



# மெக்சிகோவில் குரேரோ மாகாணத்தில் ஒரே நாளில் பன்னிருவர் படுகொலை!

மெக்சிகோ சிட்டி,மே22

மெக்சிகோவின் குரேரோ மாகாணத்தில் பல பகுதிகள் போதைப்பொருள் கடத்தலால் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளன. இந்த மாகாணத்தில் அடிக்கடி போதைப்பொருள் குழுக்கள் இடையே மோதல் ஏற்படுவதால் அப்பாவி மக்களும் கொல்லப்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில், குரேரோ மாகாணத்தில் உள்ள அகாபுல்கோ நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் நேற்று முன்தினம் ஒரே நாளில் 12 பேர் கொல்லப்பட்ட அதிர்ச்சி சம்பவம் அரங்கேறியுள்ளது.

அகாபுல்கோ நகராட்சிக்கு உட்பட்ட ரிசார்ட்டின் அகுவாஸ் பிளான்காஸ் ரவுண்டானாவுக்கு அருகே 4 ஆண்கள் மற்றும் 2 பெண்களின் உடல்கள் பல துப்பாக்கிச்சூட்டு காயங்களுடன் கண்டுபிடிக்கப்பட்டன. இவர்களில் பலரின் உடல்களில் சித்திரவதை செய்த அறிகுறிகள் தெரியவந்துள்ளன.

இதற்கிடையே, அகாபுல்கோவின் புறநகர் பகுதியில் உள்ள ரிக்கார்டோ புளோரஸ் மாகோன் மாவட்டத்தில் ஏறக்குறைய ஒரே நேரத்தில் நிகழ்ந்த 2 ஆயுதத் தாக்குதல்களில் 4 பேர் கொல்லப்பட்டனர். மேலும் ஒருவர் காயமடைந்தார்.

இந்த வன்முறை செயல்களுக்கு முன்னதாக, பிரபல ஹோட்டல் கோல்டன் சோனுக்கு அருகிலுள்ள இகாகோஸ் மாவட்டத்தில் அடையாளம் தெரியாத நபர்கள் நடத்திய துப்பாக்கி சூட்டில் ஒருவர் கொல்லப்பட்டார். இதேபோல அகாபுல்கோ ட்ரடிஷனல் என்ற ஹொட்டலின் பழைய கட்டடத்தில் ஒருவர் கொல்லப்பட்ட நிலையில் உடல் கண்டெடுக்கப்பட்டது.இந்த சம்பவங்கள் போதைப்பொருள் குழுக்கள் இடையே ஏற்பட்ட மோதலால் நடைபெற்றனவா என்ற கோணத்தில் குரேரோ மாகாண பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

பக்கங்கள் 06

கனடா முரசு

புதன்கிழமை 22/05/2024

## பணவீக்க விகிதம் கனடாவில் வீழ்ச்சி

ஒன்ராரியோ, மே 22
கனடாவின் பணவீக்கம் மூன்று ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு குறைந்துள்ளது.
கனடாவின் வருடாந்த

C2



# மூலதன இலாபம் மீதான சேர்க்கை வரி திட்டத்தை லிபரல் அரசு முன் வைக்கும்

## நிதி அமைச்சர் கிறிஸ்டியா ஃப்ரீலேண்ட் தெரிவிப்பு

ஒன்ராரியோ, மே 22
லிபரல் அரசாங்கம், நாடாளுமன்றக் கோடை விடுமுறைக்கு முன்னதாக, நாடாளுமன்றத்திற்கு மூலதன இலாபம் மீதான சேர்க்கை விகிதத்தை அதிகரிப்பதற்கான தனது திட்டத்தை முன்வைக்கும் என நிதி அமைச்சர் கிறிஸ்டியா ஃப்ரீலேண்ட் தெரிவித்துள்ளார்.

நிதியமைச்சர் தனது ஏப்ரல் வரவு - செலவுத் திட்டத்தின் ஒரு பகுதியாக மூலதன ஆதாய வரி மாற்றங்களை அறிவித்திருந்தார்.

# சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் எடுக்கும் அழுத்த நிலைப்பாட்டுக்கு ட்ரூடோ எதிர்!

ஒன்ராரியோ, மே 22
காசா பகுதியில் நடந்த போர் தொடர்பாக இஸ்ரேலிய பிரதமர் மற்றும் ஹமாஸ் தலைவர்கள் மீது வழக்குத் தொடர சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் அழுத்தம் மீது நிலைப்பாட்டை எடுப்பதற்கு எதிராகப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கருத்து வெளியிட்டுள்ளார்.

பெஞ்சமின் நெதன்யாகு, அவரது பாதுகாப்பு அமைச்சர் மற்றும் மூத்த ஹமாஸ் தலைவர்களுக்கு பிடிவிறாந்துக் கோரிக்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் பிரதான வழக்குத் தொடுநர் கோரியிருந்தார்.

'சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் அதன் பணியில் சுயாதீனமாக உள்ளது. மேலும் ஒவ்வொருவரும் சர்வதேச சட்டத்தை மதித்து கடைப்பிடிப்பது எவ்வளவு முக்கியம் என்பதை நான் ஆரம்பத்தில் இருந்தே கூறியுள்ளேன்' என்று அமெரிக்காவில் செய்தியாளர்களுக்கு கருத்துத் தெரிவித்த ட்ரூடோ குறிப்பிட்டுள்ளார்.

'இஸ்ரேலின் ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களுக்கும், ஹமாஸை வழிநடத்தும் இரத்தவெறி



பிடித்த பயங்கரவாதிகளுக்கும் இடையே சமமான நிலையை அளிப்பதனையிட்டு நான் கவலையடைகின்றேன். அது உதவியளிக்கும் என நான் நினைக்கவில்லை' என ட்ரூடோ கூறியுள்ளார்.

கனடாவில் உள்ள யூத மற்றும் முஸ்லிம் குழுக்கள், ஒட்டாவா ஒரு தீர்க்கமான நிலைப்பாட்டை எடுக்குமாறு கேட்டுக்கொண்டு, மனுக்கள் ஊடான பிரசாரங்களை மேற்கொண்டுள்ளன.



# மாகாண மொழிச் சட்டத்தின் ஒரு பகுதியை செல்லுபடியற்றதாக்கிய கியூபெக் நீதிமன்று

கியூபெக், மே 22

கியூபெக் நீதிமன்ற நீதிபதி ஒருவர், மாகாணத்தின் மொழிச் சட்டத்தின் ஒரு பகுதியைச் செயலற்றதாக அறிவித்துள்ளார்.

ஆங்கில மொழி நீதிமன்றத் தீர்ப்புகள் உடனடியாக பிரெஞ்சு மொழியில் மொழி பெயர்க்கப்பட வேண்டும் என்கிற பகுதியை அவர் செயலற்றதாக அறிவித்துள்ளார்.

நீதிமன்றங்கள் ஒரே நேரத்தில் ஆங்கிலத்தில் கொடுக்கப்பட்ட எழுத்துப்பூர்வ முடிவின் பிரெஞ்சு மொழிபெயர்ப்பை வழங்க வேண்டும் என்பது குற்றத்திற்காக குற்றம் சாட்டப்பட்ட ஆங்கிலோஃபோன் கியூபெசர்களுக்கான சட்ட செயல் முறையை மெதுவாக்கும் என டென்னிஸ் கலியாட்சாடோஸ் தமது தீர்ப்பொன்றில் எழுதியுள்ளார்.

கியூபெக் மொழி சாசனத்தில் ஜூன் 1 முதல் நடைமுறைக்கு வரவிருக்கும் ஒரு மாற்றம், ஒரு பிரெஞ்சு மொழி பெயர்ப்பு 'உடனடியாகவும் தாமதமின்றியும்' வழங்கப்பட வேண்டும் என்று கூறுகிறது.

மொழிபெயர்ப்புகளை உருவாக்கி ஒப்புதல் பெற வாரங்கள் அல்லது மாதங்கள் ஆகலாம் என்று கலியாட்சாடோஸ் கூறுகிறார்.

இந்தச் செயல்முறை, தீர்ப்புகளை தாமதப்படுத்தும் மற்றும் பிரெஞ்சு மொழியில் முயற்சி செய்பவர்களை விட ஆங்கிலத்தில் முயற்சி செய்ய விரும்புபவர்கள் தங்கள் தீர்ப்பினை அறிய அதிக நேரம் காத்திருக்க வேண்டியிருக்கும் எனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

## பணவீக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணவீக்க விகிதம் ஏப்ரல் மாதத்தில் 2.7 சதவீதமாக குறைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கனடிய புள்ளி விவரத் திணைக்களம் மே 21ஆம் திகதி வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது அடுத்த மாதத்தில் கனடிய மத்திய வங்கியின் வட்டி விகிதக் குறைப்புக்கான வாய்ப்புகளை அதிகரித்துள்ளது என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

ஆய்வாளர்கள் பணவீக்கம் மார்ச் மார்ச் மாதத்தில் இருந்து 2.9 சதவீதத்தில் இருந்து ஏப்ரல் மாதத்தில் 2.7 சதவீதமாக குறையும் என ஏற்கனவே கணித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

தற்போது உணவுப் பொருள்களின் விலைகள் குறைவடைந்து செல்லும் போக்கு பதிவாகி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வருடாந்த அடிப்படையில் உணவுப் பொருட்களின் விலைகள் கடந்த ஏப்ரல் மாதத்தில் 1.4 வீதமாக குறைவடைந்துள்ளது.

எவ்வாறெனினும், எரிவாயு விலைகள் தொடர்ச்சியாக அதிகரிப்பினை பதிவு செய்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சர்வதேச சந்தையில் எரிபொருள் விலை அதிகரிப்பு போன்ற காரணிகளினால் அண்மைக் காலமாக கனடாவில் எரிபொருள் விலை அதிகரித்துச் செல்கின்ற நிலையை அவதானிக்க முடிகின்றது.

## மூலதன இலாபம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் கடந்த மாதம் அவர் தாக்கல் செய்த வரவு – செலவுத் திட்டத்தில் புதிய சேர்க்கை விகிதத்தை உள்ளடக்கியிருக்கவில்லை.

எனவே, லிபரல் கட்சியினர் உண்மையான சட்டத்தை முன்வைப்பதற்கு முன், நாடாளுமன்ற அவையில் ஒரு முன்வைக்க வேண்டும்.

இந்த சட்டமூலம் இன்னும் நிறைவேற்றப்படாவிட்டாலும், ஜூன் 25 முதல் இந்த மாற்றம் அமுலுக்கு வரும் என்று அரசாங்கம் கூறுகிறது.

மூலதன ஆதாயத்தில் மூன்றில் இரண்டு பங்கு வரிக்கு உட்பட்டதாக மாற்ற அரசாங்கம் முன்மொழிகிறது.

தற்போது, பங்குகள் அல்லது இரண்டாம் நிலை ரியல் எஸ்டேட் சொத்து போன்ற சொத்துக்களை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் இலாபத்தில் ஒரு பாதிக்கு மாத்திரமே வரி விதிக்கப்படுகிறது.

பெருநிறுவனங்களால் அடையப்படும் அனைத்து மூலதன ஆதாயங்களுக்கும் அதிக சேர்த்தல் விகிதம் பொருந்தும், அதே சமயம் தனிநபர்கள் 250,000 டொலருக்கும் அதிகமான மூலதன ஆதாயங்களில் அதிக சேர்க்கை விகிதத்தை மட்டுமே எதிர்கொள்வார்கள்.



# சபாநாயகரிடம் மன்னிப்பு கோரிய லிபரல் கட்சியினர்

ஒன்ராரியோ, மே 22

பாகுபடான மொழியைப் பயன் படுத்தியமைக்காக லிபரல் கட்சியினர் நாடாளுமன்ற சபாநாயகரிடம் மன்னிப்பு கோரியுள்ளனர்.

லிபரல் கட்சியின் கோடைக் கால விருந்து நிகழ்விற்கான லிபரல் கட்சியின் அறிவிப்பில் சபாநாயகர் கிரெக் பெர்குஸை லிபரல் நாடாளுமன்ற உறுப் பினர் என அறிவித்திருந்தனர்.

இது தொடர்பில் எதிர்க்கட்சியான கன்சர்வேட்டிவ் கட்சியினரும், புளொக் கியூபெக் கட்சியினரும் தமது எதிர்ப்பை நாடாளுமன்றத்தில் எழுப்பியிருந்தனர்.

அத்துடன், சபாநாயகர் பதவி விலக வேண்டும் எனவும் கோரியிருந்தனர்.

இதனையடுத்தே லிபரல் கட்சியினர் நாடாளுமன்றத்தில் சபாநாயகரிடம் இது தொடர்பில் மன்னிப்பு கோரியி ருந்தனர்.

எனினும், சபாநாயகர் ஃபெர்கஸ் மீதான தனது நம்பிக்கை சிறிதும் அசைக்கப்படவில்லை என்று பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்தார்.



# கார்டினலுக்கு எதிரான பாலியல் குற்றச்சாட்டு; போதிய ஆதாரங்கள் இன்னும் கிட்டவில்லை!

கியூபெக், மே 22

கியூபெக் கார்டினலுக்கு எதிரான பாலியல் முறைகேடு குற்றச்சாட்டுகளை விசாரிக்க வத்திக்கானால் பணிக்கப்பட்ட ஓய்வுபெற்ற நீதிபதி ஒருவர், முறைப் பாட்டாளர் விசாரணையில் ஒத்துழைக்க மறுத்த போதிலும், கார்டினலை குற்றங் களுடன் இணைக்க எந்த ஆதாரமும் கிடைக்கவில்லை என்று தெரிவித் துள்ளார்.

ஓய்வுபெற்ற கியூபெக் உயர் நீதி மன்ற நீதிபதி ஆண்ட்ரே டெனிஸ் கூறுகையில், கியூபெக் நகரத்தின் பேராயர் கார்டினல் ஜெரால்ட் லாக்ரோ யிக்ஸ் தனது விசாரணையில் இருந்து விடுவிக்கப்படவில்லை என்றாலும், ஒரு விசாரணையை நியாயப்படுத்து வதற்கான ஆதாரங்கள் இதுவரை வெளிப்படுத்தப்படவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

'விசாரணையின் போது சேகரிக் கப்பட்ட கூறுகள் கார்டினலுடன் தொடர்புடைய நிகழ்வுகள் நிகழ்ந்தன என்பதை நம்பமுடியாததாக ஆக்கு கின்றன' என்று அவர் கூறியுள் ளார்.

1940 ஆம் ஆண்டுக்கு முந்தைய மதகுருமார்கள் மற்றும் ஊழியர்களால் பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாக குற்றம் சாட்டி, 2022 ஆம் ஆண்டில் உச்ச நீதிமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட வகுப்பு-நடவடிக்கை வழக்கில் குற்றவா ளிகளின் பட்டியலில் ஜனவரி மாதம் சேர்க்கப்பட்ட 15 பேரில் லாக்ரோயிக் ஸின் பெயரும் இருந்தமை குறிப்பிடத் தக்கது.




# இராணுவ சேவையில் பாகுபாட்டினால் மனநலம் பாதிப்பு என்பதை மன்று ஏற்பு

## ஃபெடரல் நீதிமன்றம் சான்றுப்படுத்தித் தீர்ப்பு

ஒன்ராரியோ, மே 22

தனது மனநலம் காரணமாக பாகுபாடு மற்றும் களங்கத்தை எதிர்கொண்டார் எனக் கூறும் நபர் ஒருவர் தாக்கல் செய்த கனடிய ஆயுதப் படைகளுக்கு எதிரான மற்றொரு வழக்கில் ஃபெடரல் நீதிமன்றம் அதை ஏற்று சான்றுப் படுத்தித் தீர்ப்பளித்துள்ளது.

களங்கத்தின் விளைவாக தங்கள் இராணுவ சேவையின் போது அவர்களின் மன-சுகாதார நிலைமைகள் மோசமடைந்தன எனக் குற்றம் சாட்டும் வாதிகளை டான் தாமஸ் பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தார்.

தாமஸின் கூற்று அறிக்கை, அவர் தனது இராணுவ சேவையின் போது உடல் ரீதியாக காயமடைந்தார் எனவும், பின்னர் PTSD பிந்தைய மனஉளைச்சல் சீர்கேடு மற்றும் மனச்சோர்வினால் அது கண்டறியப்பட்டதாகவும் கூறுகிறது.

1986 இல் பணியிலிருந்து விலகிய தன் பிறகு, தாமஸ் படைவீரர் விவகாரங்களிடம் இழப்பீடு கோரினார் என்று ஆவணம் கூறுகிறது.

அவரது கட்டளைச் சங்கிலியில் முன்னெடுக்கப்பட்ட துன்புறுத்தல் அவரது மன ஆரோக்கியத்தை மோசமாக்கியதாக தெரிவிக்கப்படுகின்றது.

படைவீரர் விவகாரங்கள் அந்தக் கோரிக்கையை மறுத்ததாகவும், முந்தைய மனநலக் கோரிக்கைக்கான முழு மாற்றுத்திறன் உரிமையைப் பெற்றதாகவும் ஆவணம் குற்றம் சாட்டுகிறது.

1986 ஆம் ஆண்டு வரை பணியாற்றிய தற்போதைய மற்றும் முன்னாள் இராணுவ உறுப்பினர்களை உள்ளடக்கிய வழக்கை ஃபெடரல் நீதிமன்றம் அனுமதிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.



# உக்ரைன் படையெடுப்பை ஆதரிக்கின்ற ரஷ்யர்கள், நிறுவனங்களுக்கு கனடா தடை

ஒன்ராரியோ, மே 22

மொஸ்கோவின் உக்ரைன் படையெடுப்பை ஆதரிப்பதாகக் கூறும் ரஷ்யர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு கனடா மீண்டும் தடை விதித்துள்ளது.

'வட கொரியாவில் இருந்து ரஷ்யாவிற்கு நீண்டதூர ஏவுகணைகள் உட்பட ஆயுதங்களை சட்டவிரோதமாக கொண்டு செல்வதற்கு வழிவகுத்துள்ளனர்' எனக் கருதப்படும் இரண்டு ஆண்கள் மற்றும் அவ்விடயத்துடன் ஆறு கப்பல் நிறுவனங்களுக்கு இந்தத் தடைகள் பொருந்தும் எனக் கனடிய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இந்த நிறுவனங்கள் இந்த ஆண்டும் கடந்த ஆண்டும் உக்ரைனில் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களை வாங்கின எனக் கனடிய வெளிவிவகார அமைச்சு கூறுகிறது.

இது வட கொரியாவுக்கு எதிரான உலகளாவிய தடைகளை மீறும் செயல் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிறுவனங்கள் ரஷ்ய இராணுவத்துடன் நெருங்கிய தொடர்புடையன எனவும், ஆயுதங்களைக் கொண்டு செல்வதில் ஈடுபட்டன எனவும் குற்றம் சாட்டுகிறது.

எனவே அவர்கள் கனேடியர்களுடன் நிதி பரிவர்த்தனைகளில் ஈடுபடுவதிலிருந்து தடை செய்யப்பட்டுள்ளனர்.



# புலம்பெயர்தல் தொடர்பில் கனடாவின் அடுத்த கட்ட நடவடிக்கை பற்றி தகவல்

புலம்பெயர்தல் தொடர்பில் கனடாவின் அடுத்த கட்ட நடவடிக்கை குறித்த தகவல் வெளியாகியுள்ள நிலையில், முதன்முறையாக தற்காலிக குடியிருப்பு அனுமதி பெற்றோருக்காக கனடா அரசு ஒரு நல்ல முடிவு எடுக்க இருப்பதாக கனடா புலம்பெயர்தல் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

புலம்பெயர்தல் தொடர்பில் கனடா என்ன செய்துவருகிறது என சமீபத்தில் கூட்டம் ஒன்றில் பேசிய கனடா புலம்பெயர்தல் துறை அமைச்சரான மார்க் மில்லர், அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்தும் சில தகவல்களை தெரிவித்துள்ளார். கனடாவுக்கு தேவைப்படும் திறன்மிகுப் பணியாளர்களை தக்க வைப்பது தொடர்பில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவரும் அதே நேரத்தில், கனேடியர்கள் மற்றும் நிரந்தரக் குடியிருப்பு அனுமதி பெற்றோருக்கான வேலைவாய்ப்புகளையும் பாதுகாப்பது குறித்தும் பேசியுள்ளார் அவர்.

அத்துடன், அடுத்த கட்ட நடவடிக்கையாக, முதன்முறையாக, கனடாவின் வருடாந்திர புலம்பெயர்தல் திட்டத்தில், தற்காலிக குடியிருப்பு அனுமதி பெற்றோரையும் இணைக்கவும் திட்டமிடப்பட்டு வருவதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளர். அதாவது, திறன்மிகுப் பணியாளர்களான தற்காலிக குடியிருப்பு அனுமதி பெற்றோரை, நிரந்தரக் குடியிருப்பு அனுமதி பெற்றோராக மாற்ற திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ள விடயம், தற்காலிக குடியிருப்பு அனுமதி பெற்றோருக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தும் செய்தியாக அமைந்துள்ளது.

# கனடாவின் முன்னணி நிறுவனமொன்றிடம் கப்பம் கோருகின்ற சைபர் குற்றவாளிகள்!

கனடாவின் முன்னணி நிறுவனமொன்றிடம், சைபர் குற்றவாளிகள் பல மில்லியன் டொலர்கள் கப்பம் கோரியுள்ளனர் என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

லண்டன் ட்ரக்ஸ் என்னும் நிறுவனத்திடமே இவ்வாறு கப்பம் கோரப்பட்டுள்ளது.

நிறுவனத்தின் பணியாளர்களின் தரவுகள் களவாடப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நிறுவனத்தின் தலைமைக் காரியாலயத் தரவுத் தளத்திற்குள் சட்டவிரோதமான முறையில் பிரவேசித்து தரவுகள் களவாடப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.




இந்த சைபர் தாக்குதல் காரணமாக மேற்கு கனடிய பகுதிகளில் ஒரு வாரத்திற்கு மேல் லண்டன் ட்ரக்ஸ் நிறுவனத்தின் கிளைகள் மூடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த சைபர் குற்றவாளிகளுக்குக் கப்பம் வழங்க விரும்பவில்லை என லண்டன் ட்ரக்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

சுமார் 25 மில்லியன் டொலர்கள் கப்பமாக கோரப்பட்ட போதிலும் அதனை வழங்கத் தயாரில்லை என நிறுவனம் அறிவித்துள்ளது.

எனினும், 8 மில்லியன் டொலர்களை வழங்கத் தயார் என லண்டன் ட்ரக்ஸ் நிறுவனம் இணங்கியதாக தாக்குதலை மேற்கொண்ட லொக்பிட் என்ற சைபர் குற்றக் குழு தெரிவித்துள்ளது. லண்டன் ட்ரக்ஸ் நிறுவனம் கனடாவின் முன்னணி மருந்துக நிறுவனங்களில் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.




# நிஜ்ஜர் கொலைச் சந்தேகநபர்களுக்கு எவருடனும் தொடர்பு கொள்ளத் தடை!

## பிரிட்டிஷ் கொலம்பியா நீதிபதி உத்தரவு

பிரிட்டிஷ் கொலம்பியா , மே 22 சீக்கிய செயற்பாட்டாளர் ஹர்தீப் சிங் நிஜ்ஜரை கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்ட நான்கு சந்தேக நபர்களும் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டபோது சமூகத்தில் உள்ள எவருடனும் தொடர்பு கொள்ளக்கூடாது என்று பிரிட்டிஷ் கொலம்பியா நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

நான்கு சந்தேக நபர்களில் மூன்று பேர் முதன்முறையாக பிரிட்டிஷ் கொலம்பியா நீதிமன்றத்தில் நேரடியாக முன்னிலையாகினர்.

நான்காவது நபர் இணையம் ஊடாக இணைந்து கொண்டார்.

நேரில் முன்னிலையானவர்கள் நீதிமன்ற அறைக்குள் நுழையும் போது சிவப்பு நிற சிறை உடைகளை அணிந்திருந்தனர்,

அதேவேளை, நான்காவது சந்தேக நபரான அமந்தீப் சிங் ஒன்ராறியோவில் காவலில் இருந்தார். அங்கு நிஜ்ஜரின் கொலைக்காக மே 10 அன்று கைது செய்யப்படுவதற்கு முன்பு அவர் இந்த வழக்குடன் தொடர்பற்ற ஆயுதக் குற்றங்களை எதிர்கொண்டிருந்தார்.

நீதிபதி எம்மெட் டங்கன் ஒரு மொழி பெயர்ப்பாளர் மூலம் அவர்களுடன் உரையாடினார்,இந்த வழக்கு ஜூன்25ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

# 121,160 நிரந்தரக் குடியிருப்பாளர்களுக்கு இந்த வருடத்தின் முதல் காலாண்டில் இடம்

இந்த வருடத்தின் முதல் காலாண்டில் கனடா சுமார் 121, 160 நிரந்தர குடியிருப்பாளர்களை வரவேற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, சுமார் 52,720 பேர் ஒன்டாரியோவிலும் 17,745 பேர் பிரிட்டிஷ் கொலம்பியாவிலும் நிரந்தர குடியுரிமையை பெற்றுக் கொண்டுள்ளனர்.

எனினும், கடந்த ஆண்டில் இந்தஜ் காலப்பகுதிக்குள் சுமார் 145,495 பேர் நிரந்தர குடியிரிமையை பெற்றுக் கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு, கனடாவில் குடியேறுபவர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், கடந்த 2022 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் இந்த ஆண்டை விட அதிகளவானோர் நிரந்தர குடியுரிமையை பெற்றுக் கொண்டிருந்தனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




அத்துடன், சுமார் 135,291 பேருக்கு ஜனவரி முதல் மார்ச் மாதம் வரையான காலப்பகுதிக்குள் நிரந்தர குடியிருப்பாளர்களுக்கான அங்கீகாரம் மற்றும் விசாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், 36,635 பேருக்கு எக்ஸ்பிரஸ் நுழைவு அமைப்பின் கீழ் நிரந்தர குடியுரிமை வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.